**Deposition of Witness** **Page. No.**

**(Chapter XXV of BNSS 2023)**
**( Section 308 BNSS 2023)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No CC.No.144 /2020**

**DEPOSITION OF WITNESS FOR PW.1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | சொக்கலிங்கம் | **Caste** | |
| **Father / Husband Name** | | **Occupation** | |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.09.2024**

**குறுக்கு விசாரணை( சி.எம்.பி906/2024 அனுமதிக்கப்பட்டதின்பேரில் சாட்சி குறுக்கு விசாரணை செய்ப்படுகிறார்.)**

நீதிமன்றத்தில் என் முன்பாக காண்பிக்கப்படும் நொடிப்பு நிலை மனு எண். 2/2020 என்னால் சார்பு நீதிமன்றம் பூந்தமல்லியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நொடிப்பு நிலை மனு எ.சா.ஆ. ஆகும்.

மேற்படி நொடிப்பு நிலை மனு எதிரி ஜெய் சங்கருக்கு எதிராக தாக்கல் செயய்ப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதற்காக மேற்படி மனுவை பூந்தமல்லி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு அவர் பணம் தர வேண்டும் அதற்காக வேலூர் முதன்மை மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளேன்.(பாண்ட் கேஸ் தொடர்ந்துள்ளேன்.) மேற்படி வழக்கு எண். 84/2019 ஆகும்.

அந்த பணத்தை பெறுவதற்காக தான் பூந்தமல்லி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நொடிப்புநிலை வழக்கில் வேறு யாரை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் நித்தியபிரியா

மற்றும் குன்டவி. மேற்படி நபர்கள் ஜெய்சங்கரின் பூந்தமல்லி வீட்டை விலைக்கு வாங்கியதால் அவர்களை தரப்பினர்களாக சேர்த்தேன்.

க்ரடிட்டார் நொடிப்பு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த நொடிப்பு நிலை மனுவில் எவ்வளவு தொகை அவர் கடனாக பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ரூ.25,00000. மேற்படி வழக்கை தொடர அனைத்து கடனாளிகளையும் சேர்க்கவேண்டும் என்றால் தெரியாது. (கற்றரிந்த எதிர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி வினா இந்த வழக்கை தீர்மானிப்பதற்கு உடையது அல்ல ஆட்சேபனை தெரிவித்தார். ஆட்சேபனையுடன் மேற்படி பதில் பதிவு செய்யப்பட்டது).

எனது மனைவி சித்திரா குடியாத்தம் சார்பு நீதிமன்றத்தில் எதிரி ஜெய்சங்கர் மீது ஒரு நொடிப்பு நிலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு எண் எனக்கு ஞாபகம் இல்லை. (கற்றரிந்த எதிர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி வினா இந்த வழக்கை தீர்மானிப்பதற்கு உடையது அல்ல ஆட்சேபனை தெரிவித்தார். ஆட்சேபனையுடன் மேற்படி பதில் பதிவு செய்யப்பட்டது).

அந்த வழக்கு எந்த சொத்திற்காக போடப்பட்டுள்ளது என்றால் அஞ்சுமான் பகுதியில் உள்ள அவரது மரவாடிக்கு அருகில் உள்ள மனை ஆகும். மேற்படி நொடிப்பு நிலை வழக்கில் பூந்தமல்லியில் உள்ள இடம்தான் மட்டும் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ( இந்த மாற்றுமுறை ஆவண சட்டவழக்கிற்கு அதனை தீர்மானிப்பதற்கு உகந்தது அல்ல என்று ஆட்சேபனை பதிவு செய்யபடுகிறது. )

இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புகார் மனுவில் நொடிப்பு நிலை வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்திற்க்கு முன்பணம் கொடுத்த தொகையை திரும்ப கேட்டு அதற்காக காசோலை எதிரி கொடுத்தார் என்றால் சரிதான்.

**(கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் அவரது தரப்பு கட்சிக்காரரர் முன்னிலையாகவில்லை அவரிடம் சில விவரங்கள் வழக்கிற்காக கேட்க வேண்டும் என்பதன் அடிப்படையில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )**

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/.Dr.J.Stalin.,M.I.,Ph.D.,
Judicial Magistrate
Gudiyatham